# தெரணியகல பிரதேச சபை
# கேகாலை மாவட்டம்

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தெரணியகல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

சபைக்குச் சொந்தமான 01 ஏக்கர் 03 றூட் 26 பேர்ச் அளவான 03 காணிக் கூறுகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

07 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 87,793,506 ஆக இருந்ததுடன் அதற்குரிய பட்டோலைகள் / அறிக்கைகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 81,049,292 ஆனமையால் ரூபா 6,744,214 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்தை விஞ்சிய பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 4,185,292 ஆகும்.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 26,788,268 ஆகும்.

## 1.4 இனங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1) ஆம் பிரிவு | 556,826 | ஏக்கர் வரி செலுத்தாமல் புறக்கணிக்கும் போது உரிய இடத்தின் உரிமையாளரின் ஆதனங்களைத் தடை செய்தேனும் அறவிடப்பட வேண்டிய போதிலும் நிலுவை ஏக்கர் வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் நிதிப்பிரமாணம் 571 | 649,575 | 2008 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,759,325 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,174,378 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 5,685,830 | 6,389,414 | 4,786,702 | 1,602,712 | 5,641,340 | 5,686,446 | 4,335,414 | 1,351,032 |
| வாடகை | 4,722,200 | 4,772,278 | 4,676,778 | 95,500 | 4,559,350 | 4,433,899 | 4,417,411 | 16,488 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 607,600 | 750,080 | 750,080 | - | 377,250 | 707,878 | 707,878 | - |
| ஏனைய வருமானம் | 106,762,030 | 75,355,738 | 31,484,538 | 43,871,200 | 78,193,664 | 63,372,595 | 21,030,461 | 42,342,134 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்தபோது அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் 23 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் வீத வரியும் வரியும், வாடகை மற்றும் ஏனைய வருமானம் முறையே 16 சதவீதம், 1 சதவீதம் மற்றும் 71 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

ஆதன வரி அறவிடக்கூடிய அபிவிருத்தியடைந்த பிரதேசங்களை இனங்கண்டு பெயரிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், அது தொடர்பாக கடந்த 10 வருடங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 வியாபார அனுமதிப்பத்திரம்

(அ) அனுமதிப்பத்திரக் கட்டணம்

அனுமதிப்பத்திர வருமானப் பதிவேட்டின் பிரகாரம், கைத்தொழில் மற்றும் வியாபார வரி செலுத்த வேண்டிய 806 இடங்களில் வியாபார அனுமதிப்பத்திரத்திற்காக பணம் அறவிடப்பட்டிருந்த போதிலும், 165 அனுமதிப்பத்திரங்கள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 641 நிறுவனங்கள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குறித்துரைத்த தகைமைகளுடன் நடாத்தப்படுகின்றமை உறுதிப்படுத்தப்படவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டில் கைத்தொழில் மற்றும் வியாபார வரி செலுத்த வேண்டிய வியாபார இடங்கள் தொடர்பான மெய்மையாய்வு நடாத்தி 579 இடங்கள் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அனுமதிப்பத்திர வருமானப் பதிவேட்டின் பிரகாரம் அறவிடப்பட்ட 806 இடங்களுடன் ஒப்பீடு செய்த போது 227 இடங்கள் குறைவொன்று ஏற்பட்டமையால் முறையான மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம்

2003 இன் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 14

கைத்தொழில்கள் அனுமதிப்பத்திரம் பெறாமையினால் ரூபா 56,000 வருமானத்தை சபை இழந்திருந்தது. அவ்வாறே அந்த நிறுவனம் சுற்றாடல் அதிகாரசபையின் நிபந்தனை / நியமங்களின் பிரகாரம் அந்த தொழிலை நடாத்துகின்றமை உறுதிப்படுத்தப்படவில்லை.

**2.2.5 ஏனைய வருமானம்**

**விளம்பர அறிவித்தல் பதாதைக் கட்டணம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் உள்ளூராட்சி அமைச்சரால் வெளியிடப்பட்டிருந்த அங்கீகரிக்கப்பட்ட உப விதியின் ஏற்பாடுகளைப் பயன்படுத்தி அல்லது இது தொடர்பாக உப விதியொன்றை விதிக்காமல் அறிவித்தல் பதாதை வருமானத்திற்காக வருடாந்தம் வர்த்தமானியில் பிரசுரித்துக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 13 ஆந் திகதி சபையின் வருமானக் கட்டுப்பாட்டாளருடன் மேற்கொண்ட தெரிவுக் களப் பரிசோதனையின் போது 53 அறிவித்தல் பதாதை காட்சிப்படுத்தல்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அத்திகதியில் காணப்பட்ட 45 அறிவித்தல் பதாதைகளுக்காக மாத்திரம் ரூபா 79,950 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 5,705,445 தொகையும், முத்திரைக் கட்டணம் ரூபா 3,066,774 தொகையும் காணப்பட்டன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் அடையப்படாமை**

தெரணியகல பேருந்து நிலையத்தை அண்மித்த 51 சந்தைக் கடைகளை நிர்மாணிப்பதற்கு 2015 ஆண்டின் போது திட்டமிடப்பட்டு அதில் 29 கடைகளுக்காக ஒரே தடவையில் அறவிடும் பணம் (Key Money) ரூபா 24,299,000 அறவிடப்பட்டிருந்த போதிலும், 2018 ஏப்ரல் வரையிலும் கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சுற்றாடல் பிரச்சினைகள்**

சபை அதிகாரப்பிரதேசத்தில் காணப்படுகின்ற மயான நிலங்களில் கழிவுப்பெருட்கள் கொண்டு போடப்படுவதற்காக பயன்படுத்தப்படுகின்றமையால், பிரதேச வாசிகளுக்கு மனித உடலை தகனம் செய்வதற்காக அதிக செலவும் மற்றும் மேலதிக ஊழியத்தைப் பயன்படுத்தி வேறொரு பிரதேசத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டியேற்பட்டிருந்தது. கூடலைக் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2014 ஆம் ஆண்டின் போது கூறுவிலை

பெறப்பட்டிருந்த போதிலும் 2018 யூன் வரையிலும் அது தொடர்பான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

-------------------------------------------------------

முறையான கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக காணியொன்று இனங்காணப்பட்டிருந்த போதிலும், காணியைக் கையேற்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக நபை அதிகாரப்பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற துண்டுக் கழிவுகள் மற்றும் கழிவுப்பொருட்களை மீள் சுழற்சி செய்வதற்கோ அல்லது முறையான பிரகாரம் அகற்றம் திட்ட முறைமையோ இன்றி சீதாவக்க நதி அருகாமையில் அமைந்துள்ள மயான நிலத்தில் திறந்த வெளியில் கொண்டு போடப்பட்டிருந்தது. இதன் காரணமாக மழை காலங்களில் கழிவுப்பொருட்கள் ஆற்று நீருடன் கலந்து சபை அதிகாரப்பிரதேசத்தில் குடியிருந்து வருகின்ற மக்களுக்கு மயான நிலத்தை பயன்படுத்துவதில் வசதியீனமொன்று ஏற்பட்டிருந்தது.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

------------------------------------------------------------

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்**

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) (i) சபையினால் அமுல்படுத்தபப்படுகின்ற இரண்டு நீர் உத்தேசத் திட்டங்களில் கஹபட்டே நீர்த்திட்டத்திற்காக குளோரின் இட்டு நீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டிருந்தும், எந்த முறையிலும் சுத்திகரிப்பு செய்யப்படாத லிஹிணியாகல நீர்த் திட்டத்தின் நீருடன் கலந்து விநியோகிக்கப்பட்டமையினால் நீர்ப் பாவனையாளர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்கு சபை தவறியிருந்தது. அந்த நீர்த் திட்டத்திலிருந்து வழங்கப்படுகின்ற நீரில் பாதகமான பற்றீரியா உள்ளடங்கியுள்ளதாக தெரணியகல சுகாதார வைத்திய உத்தியோகத்தரின் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) மேற்கூறப்பட்ட நீர் செயற்திட்டத்திற்காக களஞ்சியப்படுத்தும் தாங்கியொன்று இல்லாமல் நீர் விநியோகிக்கப்படுவதனால் மழை காலங்களில் மணல் மற்றும் கழிவுப் பொருட்களுடன் நீரைப் பயன்படுத்துவதற்கு நுகர்வோர்களுக்கு ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக நீர்ப் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நீர்மானி பாதிப்பிற்கு உட்பட்டிருந்தமை சாதாரண நிலைமையில் காணப்பட்டதுடன் நீர் மானிகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமாக செயற்பாடற்றிருந்தமையால் சரியான நீர்க கட்டணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(iii) சபை அதிகாரப்பிரதேசத்தில் தற்போது செயற்படு நிலையிலுள்ள 03 மின் உற்பத்திக் கூடம் தொடர்பாக தொழில்முயற்சியினை ஆரம்பிக்கும் போது

பெறப்பட வேண்டிய கட்டிடத்தை அங்கீகரித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.3.1 சொத்துக்கள் கையேற்கப்படாமை

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் மூலம் வழங்கப்பட்டுள்ள ரூபா 44,188,520 பெறுமதியான 06 வாகனங்கள் மற்றும் சபரகமுவ மாகாண சபையின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 7,460,875 பெறுமதியான 08 வாகனங்களின் உரித்துக்களை சபை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

வாகனங்கள் உரிய பிரகாரம் பழுதுபார்க்கப்படாமையினால் சபைக்குச் சொந்தமான 02 வாகனங்கள் பாவனைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்காக பொது நிதியத்தின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 2,125,000 பெறுமதியான 12 வேலைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தெரணியகல பேரூந்து நிலைய பொதுமலசல கூட பழுதுபார்த்தல் வேலையின் மதிப்பீட்டின் விடய இலக்கம் 5 இன் கீழ் 2 சிறுநீர்த் தொட்டியை பொருத்துவதற்காக ரூபா 57,072 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த விடயங்களுக்கான சராசரி சந்தை விலை ரூபா 10,000 அளவாக இருந்தமையும், அதன் பிரகாரம் ரூபா 47,052 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அந்த மதிப்பீட்டின் விடய இலக்கம் 2 இன் கீழ் வர்ணம் பூசுவதற்காக ரூபா 22,775 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த வேலையும் சரியான பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) வாராந்த சந்தையின் பொது மலசலகூடங்கள் நிறைந்து வழிந்தமையின் காரணமாக புதிய மலசலகூடக் குழியொன்றை அமைப்பதற்காக ரூபா 763,854 தொகையான மதிப்பீட்டின் கீழ் 1,600 கன அடி கொள்ளளவில் குழியொன்று நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், பின்னர் 515 கன அடி வரை திருத்தம் செய்வதற்குரிய திருத்த மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொத்தெனிகந்த சிறியானவத்த வீதியில் பக்கச் சுவர் நிர்மாணிக்கும் வேலையைப் பூர்த்தி செய்யும் போது சுவரின் உயரம் 12’ 6’’ அடியாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், கற்பாறையின் கல்வெளிப்பட்டமையின் காரணமாக உயரம் 10’ 1’’ அடி வரை குறைவாக காணப்பட்ட போதும், அதற்குரிய திருத்த மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) சுவரின் உயரம் குறைவடைந்தமையின் படி அகற்றப்பட வேண்டிய மண்ணின் அளவு குறைவாக இருக்க வேண்டியிருந்த போதிலும், மதிப்பீடு செய்யப்பட்ட தொகையான ரூபா 22,228 இனை விஞ்சி ரூபா 50,013 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) சுவரின் உயரம் 2’ 5’’ அடியினால் குறைவாகக் காணப்பட்டமையின் காரணமாக செப்பனிடும் கற்கள் சுவருக்காக 02 கியூப்பிற்கு அண்ணளவாக ரூபா 48,860 தொகை அளவில் குறைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கொடுப்பனவுகளில் ரூபா 18,078 தொகை மாத்திரம் குறைக்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளில் 07 செலவின விடயங்களின் கூட்டுமொத்தமான ரூபா 759,750 தொகையான நிதிஏற்பாடு 100 சதவீதமும், 31 செலவின விடயங்களின் நிதிஏற்பாடுகளில் 9 சதவீதத்திற்கும் 97 சதவீதத்திற்கும் இடையில் கூட்டுமொத்தமாக ரூபா 31,620,361 தொகையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. 05 செலவின விடயங்களுக்குரிய பாதீட்டு நிதிஏற்பாட்டை விஞ்சி 01 சதவீதம் முதல் 59 சதவீதம் வரை ரூபா 694,408 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட தவறுகளை சரி செய்யாமை |
| | (ii) நாட்குறிப்புப் பதிவுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட தெளிவுக் குறிப்புக்கள் விளக்கமாக இன்மை |
| | (iii) பட்டோலைகள் கணக்குகளுடன் இணங்காமை |
| | (iv) களஞ்சிய முற்பண முறைமை பயன்படுத்தப்படாமை |
| (ஆ) வருமான நிர்வாகம் | (i) நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்காமை. |
| | (ii) வியாபார மற்றும் கைத்தொழில் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் பதிவேடு பேணப்பட்டிராமை. |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளில் கவனத்தில் கொள்ளக்கூடிய சேமிப்புக்கள் காணப்பட்டமை |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (ஈ) | வாகனக் கட்டுப்பாடு | (i) | நாளாந்த ஓட்ட அட்டவணை சமர்ப்பிக்கப்படாமை |
| | | (ii) | வாகனங்களில் எரிபொருள் பரிசோதனை இடம்பெறாமை |
| | | (iii) | சபை பயன்படுத்துகின்ற ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமை |